**கவனிக்க.**- 12.12.2025 ஆந் திகதிய 2467 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2468 - 2025 දෙසැම්බර් මස 19 වැනි සිකුරාදා - 2025.12.19

2468 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2658 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2668 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, சனவரி மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோரால**,
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


2655 - B 82747- 403 (2025/12)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடுத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## ஹோமியோபதி மருத்துவ சபை

## வெற்றிடங்கள்

ஹோமியோபதி மருத்துவ சபையில் உள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கைப் பிரசைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **பதவி : முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத)**
**வெற்றிடங்கள்** - 01

**நியமனத்தின் தன்மை :** நிரந்தரமானது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதிக்கு உரித்துடையதாகும்.

**சம்பள அமைப்பு** : சேவை வகை தொடர்பான குறியீட்டு எண் மற்றும் மாதாந்த சம்பள அளவு MA1-1-2025-(ரூபா 46,220 - 10 x 540 - 7 x 630 - 4 x 890 - 20 x 1,190 - ரூபா 83,390)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**கல்வித் தகைமை :**

(அ) கல்விப் பொதுத்தராதரம் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில்

I. சிங்களம்/ தமிழ்
II. கணிதம்
III. ஆங்கில மொழி

நான்கு (04) பாடங்களில் சிறப்பு சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுச் சான்றிதழ் (உயர்தரம்) பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் (பொதுத் தேர்வு அல்லாத) தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) பதவிக்கு தேவையான மேலதிக தகுதிகள் கணினி சொல் செயலாக்கம் குறித்த அடிப்படை அறிவு.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

(அ) முதன்மை தரம்/ திறமையற்ற மற்றும் பகுதி திறன் சேவை பிரிவுகள் "ஆ", "இ" மற்றும் "ஈ" இல் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட உத்தியோகத்தர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில்

I. சிங்களம்/ தமிழ்
II. கணிதம்
III. ஆங்கில மொழி

மேற்குறிப்பிட்ட பாடங்கள் உட்பட, இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் அவற்றில் குறைந்தது மூன்று பாடங்களிலாவது சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

(மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பாடத் திட்டத்திற்கமைய கணினி சொல் செயலாக்கம்/ தட்டச்சு திறன் அல்லது அதற்கு சமமான பிற திறமைகள் மேலதிக தகைமைகளாகக் கருதப்படும்.)

(இ) பணியில் நிரந்தர நியமனம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் அந்த நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) உரிய திகதிக்கு முன்னராக நிரந்தர நியமனத்தின் 05 ஆண்டுகள் தொடர்ச்சியாக திருப்திகரமான சேவையை முடித்திருக்க வேண்டும்.

**வயது எல்லை** :

18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அதிகபட்ச வயது எல்லை உள்ளக விண்ணப்பதாரர்களுக்குப் பொருந்தாது.

**ஏனையவை** :

ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும்,

I. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
II. பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் மன தகுதியினைக் கொண்டிருக்க வேண்டும்.
III. சிறந்த குணநலன் கொண்டவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் நடைமுறை** :

விண்ணப்பதாரர்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை, 2026.01.08 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய முறையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**குறிப்பு** : கடிதத்தின் மேல் இடது மூலையில் "முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

பதிவாளர் (பதில்),
ஹோமியோபதி மருத்துவ சபை,
இல. 94, செல்டன் ஜயசிங்க மாவத்தை,
வெலிசறை, றாகமை.

02. **பதவி : அலுவலக உதவியாளர் (முதன்மை தொழில்நுட்பம் அல்லாத)**

**வெற்றிடங்கள்** - 04

**நியமனத்தின் தன்மை :** நிரந்தரமானது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி மற்றும் ஊழியர் சேமலாப நிதிக்கு உரித்துடையதாகும்.

**சம்பள அமைப்பு** : சேவை வகை தொடர்பான குறியீட்டு எண் மற்றும் மாதாந்த சம்பள அளவு PL1-2025 (ரூபா 40,500 - 10 x 450 - 10 x 490 - 7 x 540 - 15 x 590 - ரூபா 62,530)

**தகைமை :**

**கல்வித் தகைமை :**

கல்விப் பொதுத்தராதர சான்றிதழ் (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு (02) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

**வயது எல்லை** :

குறைந்தபட்சம் 18 வயதினைப் பூர்த்தி செய்தவர் களாகவும், 45 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

**ஏனையவை** :

ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும்,

I. இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.
II. பதவிக்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை முறையாக நிறைவேற்றுவதற்கும், நாட்டின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும் தேவையான உடல் மற்றும் மன தகுதியினைக் கொண்டிருக்க வேண்டும்.
III. சிறந்த குணநலன் கொண்டவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பிக்கும் நடைமுறை** :

விண்ணப்பதாரர்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை, 2026.01.08 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய முறையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**குறிப்பு** : கடிதத்தின் மேல் இடது மூலையில் "அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

பதிவாளர் (பதில்),
ஹோமியோபதி மருத்துவ சபை,
இல. 94, செல்டன் ஜயசிங்க மாவத்தை,
வெலிசறை, றாகமம.

12-342

---

## இலங்கைப் பாராளுமன்றம்

## வெற்றிடங்கள் - 2025

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட் டொகுதியில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் கீழ்க் காணப்படும் மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், கல்வி/ தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026, சனவரி 05 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில், "பாராளுமன்றச் செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும். (இந்த விளம்பரத்தினை www.parliament.lk எனும் இணையத் தளத்தின் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்).

1. **பிரதிப் பணிப்பாளர் (நிதி) - வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01**

1.1 **சம்பள அளவுத்திட்டம்** :

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 109,090.00 - 7 x 2,940 - 6 x 3,900 - ரூபா 153,070.00 ஆகும். (சகல மேலதிக கொடுப் பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத் திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மொத்தச் மாதாந்த சம்பளம் ரூ. 184,000.00 ஆகும்.) [மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கு மேலும் சம்பளத் திருத்தங்களைச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது].

1.2. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

1.3 **கல்வித் தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றினால் வழங்கப்பட்ட வர்த்தகம், முகாமைத்துவம் அல்லது கணக்கியல் துறை யிலான பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

1.4 **தொழில்சார் தகைமைகள்:**

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகத் தினால்/ இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் (SLIDA) வழங்கப்பட்ட நிதி முகாமைத்துவம்/ கணக்கீடு/பெறுகை ஆகிய துறைகளில் முதுமாணிப் பட்டம் பெற்றிருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

(ஆ) நிதி அமைச்சு / இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தினால் (SLIDA) நடத் தப்படும் CIGAS மற்றும் ITMIS கணினி நிகழ்ச்சித்திட்டங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

1.5 **அனுபவம்**:

இலங்கை கணக்காளர் சேவையின் III/II ஆம் தரங்களில் மொத்தமாக பன்னிரண்டு (12) வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்திசெய்திருத்தல். (பெறுகை ஏற்பாட்டு நடைமுறையில் (Procurement) அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

1.6 **ஆட்சேர்ப்பு முறை :**

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் திறன்களின் பிரகாரம்.

**பரீட்சை நடபடிமுறை :**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப் படும் நேர்முகப் பரீட்சைச் சபையொன்றினால் விண்ணப்ப தாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்ப தாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப் படுவார்கள். நேர்முகப் பரீட்சையின்போது, கீழே குறிப்பிடப் பட்டுள்ள அளவுகோல்களின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். இது தொடர்பாக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

| *தொடர் இலக்கம்* | *அளவுகோல்கள்* |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | தொழில் அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

2. **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்) - (வெற்றிடங் களின் எண்ணிக்கை 02)**

2.1 **சம்பள அளவுத்திட்டம் :**

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 58,660.00 – 9 x 1,190 - 3 x 1,360 – ரூபா 73,450.00 ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மொத்த மாதாந்த சம்பளம் ரூபா 97,000.00 ஆகும்.) [மேலே குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்கு மேலும் சம்பளத் திருத்தங்களைச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது].

2.2 **வயதெல்லை** :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 25 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.)

2.3 **கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சையில் கணிதப் பிரிவின் கீழ் நான்கு பாடங்களில் (பழைய பாடத்திட்டம்) அல்லது புதிய பாடத்திட்டத்தின் கீழ் மூன்று பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் ;

மற்றும்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது

தமிழ் மொழி, ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியம் மற்றும் கணிதம் ஆகியவற்றுக்கு திறமைச் சித்திகள் உட்பட ஆறு பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

2.4 **தொழில்சார் தகைமைகள்:**

i. தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (NDT) (மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத் தொடர்புகள்)

அல்லது

ii. உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா (HNDE)
(மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத் தொடர்புகள்)

அல்லது

iii. தேசிய பொறியியல் விஞ்ஞான டிப்ளோமா (NDES)
(மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத் தொடர்புகள்)

அல்லது

iv. திறந்த பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப டிப்ளோமா
(மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத் தொடர்புகள்)

அல்லது

v. மின்னியல்/ இலத்திரனியல்/ தொலைத் தொடர்புகள் துறையுடன் தொடர்புடைய NVQ 6 சான்றிதழைப் பெற்றிருத்தல்.

2.5 **அனுபவம்** :

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில், இலத்திரனியல்/ஒலி/ஒளி/ தொலைத்தொடர்பு/ஒலி(ளி) பரப்பு/ வளிச்சீராக்கல் மற்றும் குளிரூட்டல் அல்லது அதுபோன்ற துறையொன்றில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

2.6 **ஆட்சேர்ப்பு முறை மற்றும் பரீட்சை நடைமுறை:**

எழுத்துமூலப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சையில் பின்வரும் அளவுகோல்களின்படி புள்ளிகள் வழங்கப்படும்.

| *தொடர் இலக்கம்* | *விடயப் பரப்பு* |
|---|---|
| 1 | மேலதிக கல்வித் தகைமைகள் |
| 2 | மேலதிக தொழில்சார் தகைமைகள் மற்றும் விசேட திறமைகள் |
| 3 | சேவை அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |

3. **மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்) - (வெற்றிடங்களின் எண்ணிக்கை 05)**
**மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்) - (வெற்றிடங்களின் எண்ணிக்கை 02)**
**மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்) - (வெற்றிடங்களின் எண்ணிக்கை 03)**

3.1 **சம்பள அளவுத்திட்டம்** :

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 54,560.00 - 3 x 680 - 10 x 800 - 4 x 1,190 - 69,360.00 ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக்குறைந்த ஆரம்ப மொத்த மாதாந்த சம்பளம் அண்ணளவாக ரூ. 92,000.00 ஆகும்.) [மேற்கண்ட சுற்றறிக்கைக்கு அமைய, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்காக சம்பளத் திருத்தங்கள் மேலும் மேற்கொள்ளப்படவுள்ளன.]

ஏற்கனவே அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப் பட்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், ஒரு வருட பதிற் கடமை சேவைக் காலத்தை நிறைவு செய்த பின்னர், அவரது சம்பளப் படிநிலை முந்தைய சம்பளத்திற்கேற்ப சீரமைக்கப்படும்.

3.2 **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் ஒரு பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடைய தாகாது.)

3.3 **கல்வித் தகைமைகள்:**

கல்விப் பொதுத் தராதர (உயர்தரப்) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே தடவையில் 04 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் / (புதிய பாடத்திட்டத்தில்) ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம் மற்றும் தொடர்புடைய மொழித் துறைகளுக்கான பாடங்கள் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(தொடர்புடைய மொழித் துறைகள் - மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/ஆங்கிலம்/சிங்களம்) பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் திறமைச் சித்திகளும், மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்/தமிழ்/சிங்களம்) பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் திறமைச் சித்திகளும், மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்/தமிழ்/ஆங்கிலம்) பதவிக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் திறமைச் சித்திகளும் இருத்தல் வேண்டும்.)

3.4 **தொழில்சார் தகைமைகள்**:

கணினி அறிவு தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் சான்றிதழ் பெற்றிருத்தல்.

3.5 **அனுபவம்:**

மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்ததன் பின்னர், அரசாங்க அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் மொழிபெயர்ப்பாளராக 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

3.6 **ஆட்சேர்ப்பு முறை** :

எழுத்துமூல மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக்கொள்ளப்படும்.

(அ) **எழுத்துமூலப் பரீட்சை** :

மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் ஓர் எழுத்துமூலப் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். இந்தப் பரீட்சை மூலம் விண்ணப்பதாரர்களின் மொழிபெயர்ப்புத் திறன்கள் மதிப்பிடப்படும். இந்தப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

(ஆ) **நேர்முகப் பரீட்சை** :

எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களுக்காக பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைச் சபையினால் பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை நூறு (100) ஆகும்.

| *தொடர் இலக்கம்* | *விடயப் பரப்பு* |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | நேர்முகப் பரீட்சையில் வெளிக்காட்டும் திறன்கள் |
| 4 | தொடர்பாடல் திறன்கள் |
| 5 | அனுபவம் |

4. ஆடை அறை உதவியாளர் பதவி- [வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01]

4.1 **தொழிலின் தன்மை:**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பதவியணியினரின் சீருடைகள், திரைச் சீலைகள் உள்ளிட்ட ஆடைகளின் தூய்மை மற்றும் பேணுகையை உறுதிப்படுத்துவது தொடர்பாக, உணவு வழங்கல், வீடு பராமரிப்புச் சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து கடமைகளை நிறைவேற்றுவது இந்தப் பதவி மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கமைய, இப் பதவிக்குரிய பிரதான பொறுப்புகளில், சீருடைகள் உள்ளிட்ட ஆடைகளைச் சுத்தம் செய்தல், திருத்துதல் மற்றும் விநியோகித்தலை மேற்பார்வை செய்தல், புடவைகள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் கையிருப்பு மட்டங்களைச் சரியாகப் பேணுதல் மற்றும் சரியான அறிக்கைகளைப் பேணிவருதல், சலவைப் பட்டியல்களைப் பரிசோதித்தல் மற்றும் தேவைக் கேற்ப ஆடை வகைகளைச் சரியான நேரத்தில்

விநியோகித்தல் மற்றும் பதிலீடு செய்தல் என்பன உள்ளடங்கும்.

4.2 **சம்பள அளவுத்திட்டம்** :

2025.03.25 ஆம் திகதிய 04/2025 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ. 42,290.00 - 9 x 490 - 10 x 540 - 6 x 590 - ரூபா 55,640.00 ஆகும். (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்குரிய ஆகக் குறைந்த ஆரம்ப மொத்த மாதாந்த சம்பளம் ரூ. 80,000.00 ஆகும்.) [மேற்கண்ட சுற்றறிக்கைக்கு அமைய, 2026 மற்றும் 2027 ஆம் ஆண்டுகளுக்காக சம்பளத் திருத்தங்கள் மேலும் மேற்கொள்ளப்படவுள்ளன.]

4.3 **வயதெல்லை** :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடைய தாகாது.)

4.4 **கல்வித் தகைமைகள், தொழில்சார் தகைமைகள் மற்றும் அனுபவம்**:

(அ) க.பொ.த. (சா/தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியுடனும் கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களில் சாதாரண சித்திகளுடனும் சேர்த்து 06 பாடங்களில், இரண்டு தடவை களுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி யடைந்திருத்தல்.

மற்றும்

ஹோட்டல் வீடு பராமரிப்புத் துறையில் NVQ II மட்டச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்குறித்த தகைமைகளைப் பெற்ற பின்னர் இலங்கைச் சுற்றுலாச் சபை அங்கீகரித்துள்ள நட்சத்திர வகுப்பு ஹோட்டல் ஒன்றில் ஆடை அறை ஊழியர் பதவியிலோ அல்லது சலவைத் தொழில் (லொன்டரி) ஊழியராகவோ ஆறு மாதங்களுக்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

அல்லது

(ஆ) க.பொ.த. (சா/தர) பரீட்சையில், சிங்களம் அல்லது தமிழ் மொழிப் பாடத்தில் திறமைச் சித்தியுடனும் கணிதம் மற்றும் ஆங்கிலப் பாடங்களில் சாதாரண சித்திகளுடனும் சேர்த்து 06 பாடங்களில், இரண்டு தடவை களுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி யடைந்திருத்தல்.

மற்றும்

மேற்குறித்த தகைமைகளைப் பெற்ற பின்னர் இலங்கைச் சுற்றுலாச் சபை அங்கீகரித்துள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் ஆடை அறை ஊழியர் பதவியிலோ அல்லது சலவைத் தொழில் (லொன்டரி) ஊழியராகவோ ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

** மேற்குறித்த தகைமைகளுக்கு மேலதிகமாக தையல் பின்னல் வேலைகள் தொடர்பான செய்முறை அறிவு இருப்பது கட்டாயமாகும்.

4.5 **ஆட்சேர்ப்பு முறை :**

எழுத்துமூல/தொழில்திறன் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

(அ) **எழுத்துமூல / தொழில்திறன் பரீட்சை :**

மேற்படி பதவிக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுள் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் எழுத்துமூல/தொழில்திறன் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். அதன் போது, ஆடைகளைக் களஞ்சியப்படுத்தல், ஆடை களை சலவை செய்தல், ஆடைகளைத் தைத்தல் ஆகிய துறைகளுக்கு அமைவாக விண்ணப்பதாரர்களின் திறமைகள் நிர்ணயம் செய்யப்படும். இதன்போது 01 மணித்தியால எழுத்துமூல / தொழில் திறன் பரீட்சை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும். அப்பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

(ஆ) **நேர்முகப்பரீட்சை :**

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைச் சபையினால் பின்வரும் அளவுகோல் களின் அடிப்படையில் கட்டமைக் கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று

நடாத்தப்படும். அதில் வழங்கப்படும் ஆகக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும்.

| *தொடர் இல.* | *விடயப் பரப்பு* |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | சேவை அனுபவம் |
| 4 | ஆளுமை மற்றும் நேர்முகப் பரீட்சையின் போது வெளிக்காட்டும் திறன்கள் |

5. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும் :**

(i) இந்தப் பதவிகள் நிரந்தரமானவை. ஓய்வூதிய உரித்துடையது. இந்தப் பதவிகளுக்கு ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ஆரம்பத்தில் மூன்று (03) வருட தகுதிகாண் காலத்திற்குஉட்பட்டதாகநியமிக்கப்படுவார்கள். அரசாங்க சேவையிலோ அல்லது மாகாண அரசாங்க சேவையிலோ நிரந்தரமான ஓய்வூதிய உரித்துடைய பதவியொன்றில் சேவையாற்றிய விண்ணப்பதாரரொருவர்அல்லதுபாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒரு விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர் ஒரு (01) வருட பதிற் கடமை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவார்.

(ii) நியமிக்கப்படும் எண்ணிக்கையும் நியமனங்கள் செயல்வலுப் பெறும் திகதியும் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தால் தீர்மானிக்கப்படும். ஏதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பாதிருக்க பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அதிகாரம் உள்ளது.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பதவியணிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்கு விதிகளுக்கு இயைந் தொழுகுதல் வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படுகின்ற விகிதாசாரத்திற்கு அமைய விதவைகள் / தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு தமது சம்பளத்திலிருந்து பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(vi) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் தொடர்பான பாதுகாப்பு பற்றிய சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

6. விண்ணப்பதாரர்கள் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப் பிரதிகள் அல்ல) தமது விண்ணப்பங்களுடன் இணைத்தனுப்புதல் வேண்டுமென்பதுடன், மூலப் பிரதிகளைக் கோரும் பட்சத்தில் அவற்றைச் சமர்ப்பித்தலும் வேண்டும்.

(அ) பிறப்புச் சான்றிதழ்;
(ஆ) தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி;
(இ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்;
(ஈ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்;
(உ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

7. அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தொடர்புடைய திணைக்கள / நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

8. பதவியைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் ஏதேனுமொரு வகையில் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகுதியின்மைக்கு வழிவகுக்கும்.

9. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்று ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் அது காரணமாக அமையும்.

10. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் அனுப்பப்படும் அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படாத (தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் சேவை செய்பவராயின்) அல்லது பதவிக்கான மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள்

ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் திணைக்கள/ நிறுவனத் தலைவர்களினூடாக அனுப்பப்படும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் மொழிகளுக்கிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

குஷானி ரோஹணதீர,
பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.
2025, திசெம்பர் 15.

**இலங்கைப் பாராளுமன்றம்**

மாதிரி விண்ணப்பப்படிவம்

……………………………………………………….. பதவி

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் (தமிழில்) : ...........................................................................................................
   (ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர்கள் (தமிழில்) : ......................................................................................
   (இ) முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்): (திரு./திருமதி/செல்வி)...............................................................

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

3. (அ) (i) தனிப்பட்ட முகவரி : ...................................................................................................................................
   ........................................................................................................................................................................
   ........................................................................................................................................................................

   (ii) மின்னஞ்சல் முகவரி (e-mail) : ........................................................................

   (iii) தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

   (iv) WhatsApp தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

   (ஆ) (i) அலுவலக முகவரி : ...................................................................................................................................
   ........................................................................................................................................................................
   ........................................................................................................................................................................

   (ii) தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

   (இ) பரீட்சைக்கான அனுமதி அட்டையை அனுப்ப வேண்டிய முகவரியை தயவுசெய்து குறிப்பிடுக.

   தனிப்பட்ட ☐ அலுவலக ☐

4. (அ) பிறந்த திகதி : வருடம் :............... மாதம் :............... திகதி :...............

   (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படுதல் வேண்டும்)

   (ஆ) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு வயது :

   வருடங்கள் :.......... மாதங்கள் :............... நாட்கள் :.......

5. சிவில் அந்தஸ்து (விவாகமானவர்/விவாகமாகாதவர்): ..........................................................................................

6. பால் (ஆண்/பெண்) : .............................................................................

7. இலங்கைப் பிரசையா : (ஆம்/இல்லை)

8. கல்வித் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *பட்டம்* | *நிறுவனம்* | *செயல்வலுப் பெறும் திகதி* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

| *பரீட்சை* | *பாடங்கள்* | *சித்தி* | *ஆண்டு* |
|---|---|---|---|
| க.பொ.த (உ/தரம்) | | | |
| | | | |
| | | | |
| | | | |
| க.பொ.த (சா/தரம்) | சிங்களம்/தமிழ் | | |
| | கணிதம் | | |
| | ஆங்கிலம் | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

9. தொழில்சார் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

| *பாடநெறி* | *நிறுவனம்* | *காலப்பகுதி* | *செயல்வலுப்பெறும் திகதி (Effective date)* |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

10. வேறு தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)
.............................................................................................................................................................
.............................................................................................................................................................
.............................................................................................................................................................
.............................................................................................................................................................

11. அனுபவம் (சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்):

| *நிறுவனம்* | *பதவி* | *சேவைக் காலம்* |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

12. தற்போதைய தொழில் பற்றிய விபரங்கள் (சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்படுதல் வேண்டும்.)

(அ) நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி : ..........................................................................................................
(ஆ) முதல் நியமனத் திகதி : ..........................................................................................................
(இ) தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................................
(ஈ) மாதாந்த அடிப்படைச் சம்பளம் : ..........................................................................................................
(உ) கொடுப்பனவுகள் : ..........................................................................................................
(ஊ) முழுமொத்த சம்பளம் : ..........................................................................................................

13. நீங்கள் ஏதேனும் குற்றச்செயல் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? (ஆம் / இல்லை) அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக : ..........................................................................................................
..........................................................................................................................................................................

14. இதற்கு முன்னர் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றியுள்ளீர்களா? (ஆம் / இல்லை) அவ்வாறாயின், அது பற்றிய விபரங்களைக் குறிப்பிடுக : ..........................................................................................................
..........................................................................................................................................................................

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பொய்யானது அல்லது தவறானது என நான் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் கண்டறியப்பட்டால், இந்தப் பதவிக்கு தகுதியற்றவனாவேன் என்றும் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னர் கண்டறியப்பட்டால் எதுவித நட்டஈடுகளுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்றும் நன்கறிவேன்.

திகதி: .................................. ............................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்கள/ நிறுவனத் தலைவரின் விதப்புரை**

(அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில் பணியாற்றும் விண்ணப்பதாரர்களுக்கு மட்டும்.)

பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அவர்களுக்கு,

இந்த நிறுவனத்தில் .......................................................................................................................... பதவியை வகிக்கின்ற திரு./திருமதி/செல்வி ....................................................................................... அவர்களின் விண்ணப்பத்தை விதப்புரை செய்து சமர்ப்பிக்கின்றேன். இவர் உரிய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் / நிரந்தரமாக்கப்படவில்லை எனவும், இவரின் வேலை மற்றும் நடத்தை என்பன திருப்திகரமானது எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் ஏதுமில்லை எனவும், இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளும் அபிப்பிராயமில்லை எனவும் உறுதிசெய்கின்றேன். இவர் இப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவாராயின், இவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. (தயவு செய்து பொருத்தமற்ற சொற்களை வெட்டி விடவும்.)

திகதி: ...................................... ....................................................
திணைக்கள / நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

12-436

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## நிலஅளவைத் திணைக்களம்

## இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2025

1.0 நிலஅளவைத் திணைக்களத்தில், வெற்றிடங்கள் நிலவும் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக கொழும்பில் நடாத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்காக தகுதியுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கும் பதவிகள் :

**அட்டவணை - இலக்கம் 01**

<table>
<tr><th>தொடர் இலக்கம்</th><th>பதவிப் பெயர்</th><th></th><th>நிரப்ப வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை</th><th>ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம்</th></tr>
<tr><td>01.</td><td>தேசப்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர்</td><td></td><td>45</td><td rowspan="4">பயிலுநர் தரம்</td></tr>
<tr><td>02.</td><td>புகைப்பட வரைபடவியல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்</td><td rowspan="3">இப்பதவிகளுக்கான கடமைகள் கொழும்பில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படுவதனால் சேவைக் காலம் முழுவதும் பிரதான அலுவலகத்தில் சேவையாற்றுதல் வேண்டும்.</td><td>13</td></tr>
<tr><td>03.</td><td>தொலை உணர்வு தொழில்நுட்ப உத்தியோகத்தர்</td><td>04</td></tr>
<tr><td>04.</td><td>லித்தோ தொழில்நுட்ப உத்தியோகத்தர்</td><td>05</td></tr>
</table>

1.2 பதவிகளுக்குரிய கடமையின் தன்மை :

**அட்டவணை - இலக்கம் 02**

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *கடமையின் தன்மை /பிரதான கடமைகள்* |
|---|---|---|
| 01. | வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் | கருப்பொருள் வரைபடங்கள், புவியியல் வரைபடங்கள், மற்றும் ஏனைய வரைபடங்களின் தரவு செயலாக்கம், தரவு முறைமைகளில் தரவுகளை உட்படுத்தல், தரவு முறைமையை பயன்படுத்தி வரைபடங்களை தயாரித்தல், விமர்சனம், தரக் கட்டுப்பாடு, விற்பனை உட்பட வரைபடங்களின் தயாரிப்பிற்கான ஏனைய தொழில்நுட்ப செயற்பாடுகள், நிலஅளவை தொடர்பாக அலுவலக ரீதியான ஆரம்ப மற்றும் இறுதியான செயற்பாடுகள், பொதுமக்களுக்கு வரைபடங்களின் பிரதிகளை விநியோகித்தல், அதனுடன் தொடர்புடைய ஏடுகளை பேணுதல், செயலாற்றுகை அறிக்கையை தயாரித்தல் மற்றும் நிலஅளவை தரவு முறைமைகளின் செயற்பாடுகள் |
| 02. | புகைப்பட வரைபடவியல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | வான்வழி புகைப்படங்களைப் பயன்படுத்தி கணினி ரீதியான வரைபடங்களை தயாரிப்பதற்கான தரவுகளைச் சேகரித்தல் |

| *தொடர் இலக்கம்* | *பதவிப் பெயர்* | *கடமையின் தன்மை /பிரதான கடமைகள்* |
|---|---|---|
| 03. | தொலை உணர்வு தொழில்நுட்ப உத்தியோகத்தர் | வான்வழி புகைப்படங்கள் மற்றும் செயற்கைக் கோள் தரவுகளின் விளக்கம் மற்றும் பகுப்பாய்வு, வரைபடங்களைத் தயாரித்தல் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல், அவற்றை கணினி மயமாக்குதல் மற்றும் தேவையான தரவுகளை வழங்குதல் |
| 04. | லித்தோ தொழில்நுட்ப உத்தியோகத்தர் | வரைபடங்கள் மற்றும் திணைக்களத்தின் ஏனைய அச்சீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் |

2.0 நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனத் திகதியானது நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். அனைத்து வெற்றிடங்களும் அல்லது ஏதேனும் வெற்றிடங்களை நிரப்பாமல் விடுவதற்கு நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

3.0 **சம்பளம் :**

**அட்டவணை - இலக்கம் 03**

| *தரம்* | *சம்பள அளவுத் திட்டம்* |
|---|---|
| பயிலுநர் தரம் | முதலாம் வருட மாதாந்தக் கொடுப்பனவு ரூ. 41,317.00<br>இரண்டாம் வருட மாதாந்தக் கொடுப்பனவு ரூ. 41,689.00<br>(பொ.நி.சு. 10/2025 இன் அட்டவணை VI இற்கு அமைவானது) |
| தரம் III | மாதாந்தம் ரூ. 52,250 – 10 x 800 – 11x1,190 – 10x1,320 - 10x1,350 – ரூ. 100,040.00<br>(MN3 - 2025) |
| தரம் II | மாதாந்தம் ரூ. 52,250 – 10 x 800 – 11x1,190 – 10x1,320 - 10 x1,350 – ரூ. 100,040.00<br>(12 ஆவது சம்பளப் படிமுறையில் இருந்து ஆரம்பமாகும்)<br>(MN3 - 2025) |
| தரம் I | மாதாந்தம் ரூ. 52,250 – 10x800 – 11x1,190 – 10x1,320 - 10x1,350 – ரூ. 100,040<br>(23 ஆவது சம்பளப் படிமுறையில் இருந்து ஆரம்பமாகும்)<br>(MN3 - 2025) |
| விசேட தரம் | மாதாந்தம் ரூ. 71,240 – 11x1,360 – 18x1,850 - ரூ. 119,500<br>(MN7 - 2025) |

4.0 **பதவிக்குரிய சேவை நிபந்தனைகள் :**

4.1 பயிற்சி பெறும் தரத்திற்கென ஆட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தியதலாவை அளவை மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தின் மூலம் குறித்த பதவிக்கென நடாத்தப்படும் இருவருட கோட்பாடு மற்றும் செயன்முறைப் பயிற்சியுடனான தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமா பாடநெறியில் சித்தி பெற்றதன் பின்னர் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தரம் III இல் நியமிக்கப்படுவர்.

4.2 இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III பதவிகள், நிரந்தரமானவை, ஓய்வூதிய உரித்துடையவை. ஓய்வூதியம் தொடர்பில் அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் கொள்கைத் தீர்மானங்களுக்கு உட்பட்டவை. மேலும், விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசு காலத்துக்கு காலம் விதிக்கும் நியமனங்களுக்கு அமைய அதற்கான பங்களிப்பை வழங்குதல் வேண்டும்.

4.3 இலங்கை தொழில்நுட்ப சேவை தரம் III பதவி நியமனமானது 03 வருட தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டது.

4.4 வரைபட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நாட்டில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

4.5 தெரிவு செய்யப்படுவோர் இவ் வர்த்தமானி அறிவித்தலில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரச சேவை நியமனம் தொடர்பிலான பொது நிபந்தனைகளுக்கும், தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணம் மற்றும் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் சட்ட விதிகள் மற்றும் அவற்றில் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சேவை நடைமுறை விதிகள், அரசு வெளியிடும் அரசாங்க

சேவைகளுடனான ஏனைய நியமங்களுக்கும் உட்படுதல் வேண்டும்.

4.6 அரசகரும மொழி அல்லாத மொழிமூலத்தில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குறித்த மொழித் தேர்ச்சியை தகுதிகூர் காலத்துக்குள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

4.7 பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 18/2020 இன் ஏற்பாடுகளுக்கு அமைய ஏனைய அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

4.8 தரம் III இல் 05 வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர், இணைந்த மொழியான ஆங்கில மொழி தொடர்பாக க.பொ.த. (சாதாரண தரப்) பரீட்சையில் திறமைச் சித்தியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

4.9 இரண்டு வருடகால பயிற்சியினை முழுமையாக பூர்த்தி செய்வதாகவும், இரண்டு வருட கால பயிற்சியின் பின்னர் 06 வருடங்கள் திணைக்களத்தில் சேவையாற்றுவதாகவும், நிலஅளவையாளர் நாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றினைக் கைச்சாத்திட வேண்டியதுடன், அவர் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட தினத்தின் பின்னர் பயிற்சியில் இருந்து விலகிச் சென்றாலோ அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்ட காலப்பகுதியில் திணைக்களத்தில் சேவை யாற்ற தவறினாலோ பயிற்சிக்காக அரசு செலவிடும் ரூ. 1,50,000 தொகையினை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு செலுத்துவதாக, திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும் பிணையாளர்கள் இருவர் ஊடாக உறுதிப்படுத்தல் உடனான பிணைமுறி ஒன்றினை பயிற்சியினை ஆரம்பிக்கும் முன்னர் எழுதி கையொப்பம் இடல் வேண்டும்.

5.0 தகைமைகள் :

5.1 **கல்வித் தகைமைகள் :**

இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் ஆகிய இரண்டு (02) பாடங்களுடன் விஞ்ஞானம் / கணிதம்/ தொழில்நுட்பவியல் பாடத்தொகுதிகளுக்கான மூன்று பாடங்களில் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருந்தல்.

மற்றும்

சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்தில் திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் க.பொ.த. (சாதாரணத் தரப்) பரீட்சையில் (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

5.2 **உடலியல் தகைமைகள்**

ஒவ்வொரு பரீட்சார்த்தியும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதிய உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5.3 **ஏனையவை :**

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. சிறந்த நடத்தை உள்ளவராக இருத்தல்.

iii. ஏதேனும் ஒரு சமயப் பிரிவின் மதகுரு ஒருவராக தலைமைத்துவத்தை வகிக்கும் எவரும் இப் பரீட்சைக்குத் தோற்று வதற்குத் தகைமை பெறமாட்டார்.

iv. விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித் தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்தன்று உத்தி யோகத்தர் சகல தகைமைகளையும், மற்றும் உரிய வயதெல்லையினையும் சகல வகையிலும் பூர்த்தி செய்திருந்தால் மாத்திரமே சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகைமை களைப் பூர்த்தி செய்திருப்பதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

6.0 **வயது** :

6.1 **ஆகக் குறைந்த வயதெல்லை** : 18 வருடங் களுக்குக் குறையாத

6.2 ஆகக்கூடிய வயதெல்லை : 30 வருடங்களுக்கு மேற்படாத

7.0 **பயிலுநர் தரத்திற்கு இணைத்துக் கொள்ளும் முறை :**

நிலஅளவையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையினதும் பொதுவான நேர்முகப் பரீட்சையினதும் பெறுபேறுகளின் அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படுவர். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறன் ஒழுங்கு முறைக்கு ஏற்பவும் பதவிக்காக காட்டப்படும் விருப்பின் அடிப்படையிலும் இணைத்துக்கொள்ள எதிர்பார்க்கும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கை ஒன்றினை பொதுவான நேர்முகப் பரீட்சை ஒன்றிற்கு உட்படுத்தி தகைமை பெற்றவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

7.1 **எழுத்துப் பரீட்சை** :

பரீட்சை இரண்டு பாடங்களை உள்ளடக்கிய எழுத்துமூலப் பரீட்சையாகும். மேற்படி

பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படுவதுடன் கோரப்படும் மொழிமூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

| *பாடங்கள்* | *பெற்றுக் கொள்ளக் கூடிய மொத்தப் புள்ளி களின் எண் ணிக்கை* | *சித்தியடை வதற்காக பெற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த புள்ளி களின் சதவீதம்* | *நேரம்* |
|---|---|---|---|
| பொது விவேகம் | 100 | 40% | 01 மணித் தியாலம் |
| தொழில்நுட்ப வினாத்தாள் | 100 | 40% | 02 மணித் தியாலம் |

7.1.1 **பாடத்திட்டம் :**

I. **பொது விவேகப் பரீட்சை** :

பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான சிந்தனைத்திறன், அவரது சிந்திக்கும் பகுப்பாய்வு நிலைமை மற்றும் தீர்மானிக்கும் ஆற்றல் என்பவற்றினைத் தீர்மானிப்பதற்கான கேள்விகளை உள்ளடக்கியது.

II. **விடயம் தொடர்பான தொழில்நுட்ப பரீட்சை :**

**கணிதம்** :

* இயற்கணிதம் (சமத்துவமின்மைகள், மாறிகள், தொடர்கள், மடக்கைகள்)
* திரிகோண கணிதம் (சமன்பாடுகள், முக்கோண அளவைகளைத் தீர்த்தல்)
* புள்ளிவிபரவியல் (இடை, ஆகாரம், நியம விலகல், நிகழ்தகவு)

**பௌதீக விஞ்ஞானம்** :

* ஒளி மற்றும் ஒளியியல் (பிரதிபலிப்பு மற்றும் ஒளிவிலகல், கண்ணாடிகள், வளைந்த மேற்பரப்பு, ப்ரிஸம், லென்ஸ், வானியல் சூத்திரங்கள், நுண்ணோக்கி மற்றும் தொலைநோக்கி)
* நியூட்டனின் இயக்கவியல் (ஸ்கேலர் மற்றும் வெக்டார், நியூட்டனின் இயக்க விதி, இயக்கவியல்)

**பல்வேறு தலைப்புகள்**

* புவியியல் அறிமுகம் (புவியின் வடிவம், புவியியல் பண்புகள் ஆகியன)
* திண்மப் பொருட்களின் கோணப் பார்வை மற்றும் ஒளிப்படங்களை பகுதிகளாக வேறாக்கல்.

7.2 **பரீட்சைப் பெறுபேறுகள் :**

விண்ணப்பதாரிகளின் பரீட்சைப் பெறுபேறு அறிவித்தலானது நிலஅளவையாளர் நாயகத் தினால் தபால் மூலம் அல்லது www.survey.gov.lk இணையத்தளம் ஊடாக அறிவிக்கப்படும்.

7.3 **பொதுவான நேர்முகப் பரீட்சை :**

தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக மாத்திரம் நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படு வதுடன் நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

8.0 **பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் தரம் III இற்கு இணைத்துக் கொள்ளப்படல் :**

1. பயிலுநர் தரத்திற்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தியதலாவை நிலஅளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத் தினால் நடாத்தப்படும் இரண்டு வருட கால, தொழில்நுட்பவியல் டிப்ளோமா பாட நெறியினை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர் மேற்படி நிறுவனத்தின் மூலம் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைந்ததாக வழங்கப்படும் சான்றிதழினை சமர்ப்பிப்பதன் ஊடாக தரம் III இற்கு இணைத்துக் கொள்ளப் படுவர்.
2. பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட் சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்களுக்கு ஆகக் கூடியது 06 மாத காலமளவு தமது பயிற்சிக் காலத்தினை நீடித்துக்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப் பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் பதவி முடிவுறுத்தப்படும்.

9.0 **விண்ணப்பங்களைத் தயாரித்தல் மற்றும் பூர்த்தி செய்தல் :**

9.1 இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய செ.மீ. 21 x 29 (A4) அளவிலான தாளின்

இரு பக்கங்களிலும் அமையுமாறு சுயமாகத் தயாரிக்கப்பட வேண்டும். தாளின் முதல் பக்கத்தில் 01 – 3.8 வரையிலான தலைப்புகளையும், இரண்டாம் பக்கத்தில் இல. 4.0 – 9.1 வரையிலான தலைப்புகளையும், மூன்றாம் பக்கத்தில் இல. 10.0 – 14 வரையிலான தலைப்புகளையும் உள்ளடக்கி விண்ணப்பப் படிவமானது தயாரிக்கப்படல் வேண்டும்.

9.2 தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்திலேயே விண்ணப்பத்தினைத் தயாரிக்க வேண்டியதுடன் மொழிமூலத்தினை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது என்பதனால் சரியான முறையில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

9.3 சிங்கள மொழியிலும் மற்றும் தமிழ் மொழியிலும் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயரினை மேற்படி மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடுதல் வேண்டும்.

9.4 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு இருத்தல் வேண்டும். ஏதேனும் நிறுவனம் ஒன்றின் ஊடாக பரீட்சைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி ஒருவராயின் தனது கையொப்பத்தினை திணைக்களத் தலைவர் அல்லது அவரினால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் மூலமாகவோ, அவ்வாறின்றிய விண்ணப்பதாரி தனது கையொப்பத்தினை அரச பாடசாலை அதிபர் ஒருவரினால், சமாதான நீதவான் ஒருவரினால், சத்தியப் பிரமாணம் செய்த ஆணையாளர் ஒருவரினால், பிரபல நொத்தாரிசு ஒருவரினால், முப்படைகளில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால், அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பொலிஸ் சேவை பதவி ஒன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால், அல்லது அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் தரப்படுத்தலுக்கு அமைய மூன்றாம் நிலை அல்லது சிரேட்ட மட்டத்திலுள்ள அரச சேவையில் நிரந்தர பதவி ஒன்றினை வகிக்கும் அலுவலர் ஒருவரினாலோ உறுதிப்படுத்தல் வேண்டும்.

**10.0 விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் :**

10.1 உரிய மாதிரிப் படிவத்தினை ஒத்திராத, உரிய தினத்திற்கு முன்னர் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தாத மற்றும் சரியாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் எந்தவொரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். உரிய வகையில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யாமையினால் ஏற்படும் நட்டத்திற்குரிய பொறுப்பினை விண்ணப்பதாரிகளே ஏற்றல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாக அமையும். பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப் படிவம் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி விசாரித்து அறிந்து கொள்ளவேண்டும். அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம்.

10.2 விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் தொலைந்து போகும் விண்ணப்பங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் எந்தவொரு முறைப்பாடும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

10.3 வர்த்தமானி அறிவித்தலில் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற ஊகத்தின் அடிப்படையில் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உரிய தினத்தன்று அல்லது அத் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரிகளுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நிலஅளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதிப் பத்திரத்தினை வழங்குதல் விண்ணப்பதாரி மேற்படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கோ அல்லது இப் பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என்பதனை ஏற்றுக் கொள்வதாகவோ கருதப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலுக்கு ஏற்ப தகைமைகளைக் கொண்டுள்ளாரா எனப் பரீட்சிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமைகள் இல்லாமை தொடர்பாக அறிய வருமாயின் அவர்களின் பரீட்சார்த்தத் தன்மை செல்லுபடியற்றதாக்கப்படும்.

**11.0 பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணம் ரூ. 800 ஆகும். மேற்படி தொகையினை கொழும்பு 05, கிருல வீதி, இல. 150 என்ற இடத்தில் அமைந்துள்ள நிலஅளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவிற்கு அல்லது எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்தில் அல்லது நிலஅளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனம் - தியதலாவ என்ற அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் அதற்காக

ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச் சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை தொடர்ந்து வரும் தேவைகளுக்காக தம்வசம் வைத்துக் கொள்ளல் வேண்டும்) எந்தவொரு காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணமானது மீள செலுத்தப்பட மாட்டாது என்பதுடன், காசுக் கட்டளைகள் அல்லது காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பற்றுச் சீட்டுகள் இன்றி சம்ர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

12.0 **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

12.1 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை 2026.01.16 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நிலஅளவையாளர் நாயகம்,
பரீட்சைகள் பிரிவு,
நிலஅளவைத் திணைக்களம்,
இல. 506,
கொழும்பு 05.

12.2 விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தொழில்நுட்பவியல்சேவையின்பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு – திறந்த போட்டிப் பரீட்சை 2025" என விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

12.3 விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங் களை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

க.வே. : 2026.01.16 ஆந் திகதியின் பின்னர் நிலஅளவைத் திணைக்களத்திற்குக் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் எந்தவொரு காரணத் தின் அடிப்படையிலும் பொறுப்பேற்கப்பட மாட்டாது.

12.4 பரீட்சை அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்ட வுடன் அது குறித்து இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் அறிவித்தல் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 3 அல்லது 4 நாட்களுக்குப் பின்னர் தமது பரீட்சை அனுமதி பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அது குறித்து இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் பரீட்சைப் பிரிவில் விசாரிக்க முடியும்.

13.0 **போலியான தகவல்களை வழங்குதல் :**

இப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவரேனும் ஒருவர் தகைமை அற்றவரெனத் தெரியவருமாயின் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறுவதற்கு இடையில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத் தன்மையினை இரத்துச் செய்வதற்கு வாய்ப்புண்டு. சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னரும் பரீட்சார்த்தி ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனுமொரு தகவல் பொய்யானது என அறிந்தும் சமர்ப்பித்து உள்ளமை தொடர்பாகவோ அல்லது ஏதேனும் முக்கியமான விடயத்தினை வேண்டுமென்றே மறைத்துள்ளமை தொடர்பாகவோ அறியவருமாயின் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

14.0 **பரீட்சைக்குத் தோற்றுதல் :**

பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் அனுமதிப்பத்திரத்தில் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் தனது கையொப்பத்தினை உறுதிப்படுத்திய அனுமதிப் பத்திரத்தினை சமர்ப்பிக்க வேண்டியதுடன், அவ்வாறின்றி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தங்களுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது. மேலும், பரீட்சார்த்தி தனக்குக் குறித்து ஒதுக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

15.0 **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சை மண்டபத்தில் தான் தோற்றும் ஒவ்வொரு பாடம் தொடர்பாகவும் பரீட்சை நிலையப் பொறுப் பதிகாரி திருப்தியுறும் வகையில் விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியிருத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

(I) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டை.

(II) செல்லுபடியான கடவுச் சீட்டு.

16.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில், நிலஅளவையாளர் நாயகத்தினால் தீர்மானம் எடுக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் மேற்படி வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப் பட்டுள்ள பொதுவான பரீட்சைச் சட்டவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குக் கட்டுப்பட்டு உள்ளனர்.

என்.கே.யு.ரோஹண,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 05.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை – 2025**

Open Competitive Examination for Recruitment to Training Grade Posts in Sri Lanka Technological Service – 2025

| அலுவலக பாவனைக்காக |
|---|
| |

01. பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்

சிங்களம் - S
தமிழ் - T ☐
ஆங்கிலம் -E

(குறித்த எழுத்தைப் பெட்டியினுள் எழுதுக.)

02. ஆட்சேர்ப்பு செய்யப்படும் பதவிகளில் நியமனம் பெறுவதற்கான விருப்பத் தெரிவின் ஒழுங்குமுறை :

அதிகூடிய விருப்பத்துடனான பதவிக்கு இலக்கம் 01 எனவும், முறையே ஏனைய பதவிகளுக்கான விருப்பம் குறைந்து செல்லும் அடிப்படையில் இலக்கங்களை குறிப்பிடுக.

| **பதவிப் பெயர்** | **விருப்ப இலக்கம்** |
|---|---|
| தேசப்பட தொழில்நுட்ப உத்தியோகத்தர் | ☐ |
| புகைப்பட வரைபடவியல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | ☐ |
| தொலை உணர்வு தொழில்நுட்ப உத்தியோகத்தர் | ☐ |
| லித்தோ தொழில்நுட்ப உத்தியோகத்தர் | ☐ |

03. முதல் எழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் :
……………………………………………………………………………………

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதாரணம் : PERERA A.B.C

3.1 முழுப் பெயர் :

……………………………………………………………………………………..

(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

3.2 முழுப் பெயர் :

……………………………………………………………………………………..

(சிங்களத்தில் / தமிழில் )

3.3 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

3.4 பிறந்த திகதி :

ஆண்டு : …………… மாதம் : ………….. திகதி : ………………..

3.5 2026.01.16 ஆம் திகதிக்கு வயது :

வருடங்கள் : …………… மாதங்கள் : ………….. நாட்கள் : ………………..

3.6 பெண் / ஆண் : (பெண் - F, ஆண் - M) ☐
(குறித்த எழுத்தை பெட்டியினுள் எழுதுக.)

3.7 திருமணமானவரா? / திருமணமாகாதவரா? :
திருமணமானவர் ☐

திருமணமாகாதவர் ☐

(குறித்த ✓ அடையாளத்தை பெட்டியினுள் இடுக)

3.8 கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4.0 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : …………………………

4.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) : …………………………

4.2 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய விலாசம் : …………………………
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்)

4.3 தொலைபேசி இலக்கம் (இருப்பின்) : …………………………

5.0 விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் : …………………………

5.1 பிரதேச செயலாளர் பிரிவு : …………………………

5.2 கிராம அலுவலர் பிரிவு : …………………………

6.0 கல்வித் தகைமைகள் : (குறித்த சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

6.1 க.பொ.த (சா/த) பரீட்சை தொடர்பான விபரம் :

i. பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் : …………………………
ii. பரீட்சை இலக்கம் : ………………………………..
iii. பெறுபேறு :

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

6.2 க.பொ.த (உ/த) பரீட்சை தொடர்பான விபரம் :

i. பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் : …………………………
ii. பரீட்சையின் இலக்கம் : ………………………………..
iii. பெறுபேறு :

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

7.0 தொழில்சார் /தொழில்நுட்பவியல் தகைமைகள் : (உரிய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும் )

7.1 பயின்றுள்ள பட்டம் / பாடநெறி : …………………………………………..
7.2 பட்டம் / பாடநெறியினைப் பயின்ற நிறுவனத்தின் பெயர் :
……………………………………………………………………….
7.3 பட்டம் / பாடநெறியின் காலப்பகுதி : ……………………………………

8.0 ஏனைய தகைமைகள் : ……………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………………………

9.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் ஒரு குற்றச்சாட்டிற்காக நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா?
(குறித்த ✓அடையாளத்தை பெட்டியினுள் இடுக)

ஆம் ☐ இல்லை ☐

9.1 "ஆம்" எனின், அது குறித்த விபரங்களை குறிப்பிடுக. : ………………………………………………………………

10.0 விண்ணப்பதாரி இதற்கு முன்னர் அரசாங்க / மாகாண சேவையில் தொழில் ஒன்றில் ஈடுபட்டு விலகி இருக்கும் ஒருவராயின் அவ்வாறு விலகுவதற்கான காரணம் : ………………………………………………………………………………

11.0 பரீட்சை கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள் :

11.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் : …………………
11.1 பற்றுச் சீட்டின் இலக்கம் மற்றும் திகதி : …………………………
11.2 செலுத்தப்பட்டத் தொகை : ரூ. ………………………

பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக்கொள்ளவும்.)

12.0 விண்ணப்பதாரியின் சான்றுபடுத்தல் :

* இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானதும் சரியானதும் என சான்றளிக்கின்றேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதியினை பூர்த்தி செய்யாமல் இருப்பதனால் மற்றும் /அல்லது பிழையாகப் பூர்த்தி செய்வதனால் ஏற்படக்கூடிய நட்டத்தினை ஏற்றுக்கொள்ள உடன்படுகின்றேன். மேலும், இங்கு சகல பகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளதாகவும் உறுதிமொழிகின்றேன்.

* என்னால் வழங்கப்பட்டுள்ள இக் கூற்றுகள் போலியானது என நிரூபிக்கப்பட்டால், நியமிக்கப்படுவதற்கு முன்னர் நான் பொருத்தமற்றவர் எனவும், நியமனம் பெற்றதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படவும் கட்டுப்பட்டு உள்ளதனை நான் அறிவேன்.

* மேலும், பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக நில அளவையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்பதனை உறுதிமொழிகின்றேன்.

* இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன் எனவும் உறுதி மொழிகின்றேன்.

திகதி : ……………………..                                                                    …………………..
விண்ணப்பதாரியின் கையொப்பம்

13.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுபடுத்தல் :

இவ் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./ திருமதி / செல்வி …………………………………….. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் …………………….. ஆம் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

திகதி : ……………………

சான்றுபடுத்துபவரின் பெயர் : ……………………………..

பதவி : …………………………

விலாசம் : ………………………

(உத்தியோகபூர்வ முத்திரை)

14.0 தற்போது அரசாங்க அல்லது பகுதியளவு அரசாங்க நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்களுக்காக மாத்திரம் ஏற்புடையதாகும்.

திணைக்கள / நிறுவனத் தலைவரின் உறுதியுரை :

மேற்படி விண்ணப்பத்தினைச் சமர்ப்பித்துள்ள திரு./திருமதி/செல்வி …………………………………….. அவர்கள் …………………………… திணைக்களத்தில் /நிறுவனத்தில் ……………………… ஆந் திகதி முதல் ……………… ஆந் திகதி வரை ………………………….. ஆக பணிபுரிவதுடன், அவருக்கு எதிராக பூர்த்தி செய்யப்படாத ஒழுக்காற்றுக் குற்றச்சாட்டுக்கள் அறிக்கையிடப்பட்டு உள்ளது / இல்லை. அவரின் வேலை நடத்தை மற்றும் வருகை திருப்திகரமானது/ திருப்திகரமற்றது. உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி உள்ளதாகவும், மேற்படி பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டு உள்ளது எனவும், அவர் மேற்படி பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் மேற்படி திணைக்களத்தில் /நிறுவனத்தில் இருந்து இந்த அலுவலரினை விடுவிக்க முடியும் / முடியாது என்பதனையும் அறியத் தருகின்றேன்.

திகதி : ……………………..                                                    ………………………………….
திணைக்களத் / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

12-407

## கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## நில அளவைத் திணைக்களம்

## நிலஅளவைத் திணைக்களத்தின் நில அளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் பதவிக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை – 2025

1.0 நிலஅளவைத் திணைக்களத்தின் நில அளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் பதவியில் நிலவும் 03 பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடாத்தப்படவுள்ள திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பதவியின் தன்மை :**

நில அளவை செயற்பாடுகளுக்கான உபகரணங்கள் மற்றும் கருவிகளின் பராமரிப்பு மற்றும் சேவை

2. 2.1 பரீட்சைக்கு தோற்ற வேண்டிய வினாப் பத்திரங்கள்

| *பாடங்கள்* | *நேரம்* | *ஆகக் கூடிய புள்ளிகள்* | *சித்தியடையும் புள்ளிகள்* |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| தொழில்நுட்ப வினாப்பத்திரம் | 02 மணித்தியாலம் | 100 | 40% |

2.2 பாடத்திட்டம் :

I. **நுண்ணறிவு** :

பரீட்சார்த்தியின் பகுத்தறிவுத் திறன்கள், அவரது பகுப்பாய்வு சிந்தனைத்திறனை தீர்மானிக்க வடிவமைக்கப்பட்ட வினாக்கள் உள்ளடக்கப்படும்.

II. **தொழில்நுட்ப வினாப்பத்திரம் :**

* புகைப்பட அளவியல் (வட்ட கண்ணாடிகளின் பிரதிபலிப்பு, பிரிசம் ஆடிகள் மற்றும் பல்வேறு ஊடகங்கள் மூலம் ஒளிவிலகல், மனிதக் கண், நுண்ணோக்கி, தொலைநோக்கி)
* மின்னியல் (நேரடி மின்னோட்டம், 'ஓம்' இன் விதி, 'கர்வொப்' விதி, சாத்தியமான வேறுபாடு, நிலஅளவை முறைகள்)
* காந்தவியல் (மின் காந்தவியல்)
* நிலையான மின்னியல் ('கூலோம்' இன் விதி)
* அலைகள் (மின்காந்த அலைகள்)
* மின்னணு இயற்பியல் (குறைகடத்தி டையோட்கள் மற்றும் டிரான்சிஸ்டர்கள்)
* வெப்பம் (நேரியல் விரிவாக்கத்தின் விரிவாக்கக் குணகம்)
* கணிதம் (முக்கோணவியல், நியூட்டனின் இயற்பியல், வானியல்)

2.3 இவ்வினாப் பத்திரங்களில் பெற்றுக் கொள்ளப்படும் மொத்த புள்ளிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

3. **ஆட்சேர்ப்பு செய்யும் தரம்** :

நில அளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் பதவி - தரம் III

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்** :

I. இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். அத்தோடு, இப்பதவி மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்பட்டது. தங்களுக்கு உரித்தான ஓய்வூதி முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு / தபுதாரர்கள், அநாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். தாங்கள் காலத்துக்குக் காலம் அரசாங்கம் பிரகடனப்படுத்தும் விதத்தில் இந் நிதியத்திற்கு உதவு தொகைகள் செலுத்துதல் வேண்டும்.

II. தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் கொழும்பு பிரதான அலுவலகத்தில் மட்டும் சேவையாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும். இவ் வர்த்தமானியில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க சேவையின் நியமனங்களுக்கான பொது நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

5. **சம்பள அளவுத்திட்டம் :**

MTI-2025 ரூபா 50,090.00 - 10 x 540 - 11 x 630 - 10 x 1,010 - 10 x1,190 - ரூபா 84,420.00

* அச் சம்பளம் உங்களுக்கு உரித்தாவது 2025.04.01 ஆந் திகதியிலிருந்தாகும். அ. நி. சு. 10/ 2025 ஆம் இலக்க உப அட்டவணை II இன் படி சம்பளம் செலுத்தப்படும்.

**தரங்களின் அடிப்படையில் ஆரம்ப சம்பளப் படிமுறை :**

| *தரம்* | *ஆரம்ப சம்பளப் படிமுறை* | *ஆரம்ப சம்பளப்படி* |
|---|---|---|
| தரம் III | படிமுறை 01 | ரூபா 50,090 |
| தரம் II | படிமுறை 12 | ரூபா 56,120 |
| தரம் I | படிமுறை 23 | ரூபா 64,430 |

6. **வயதெல்லை** :

விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

7. **தகைமைகள்** :

7.1 **கல்வித் தகைமைகள் :**

சிங்களம்/ தமிழ் / ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களில் விசேட சித்திகள் அத்தோடு ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களை கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

7.2 **தொழிற் தகைமைகள் :**

பதவிக்கான இலத்திரனியல் அல்லது இயக்க வியல் தொடர்பான NVQ 05 ஆம் மட்ட பாடநெறியினை பூர்த்தி செய்திருத்தல்.

7.3 **உடற் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்று வதற்கு உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் பொருத்தமானவராக இருத்தல் வேண்டும்.

7.4 **ஏனையவை :**

விசேட தகைமையாக கருதப்படும்.

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. சிறந்த நடத்தை உள்ளவராக இருத்தல்.
iii. 7.1 இலிருந்து 7.4 வரையான தகைமை களை வர்த்தமானி அறிவித்தலில் குறிப் பிடப்பட்டுள்ள விண்ணப்பம் கோரப்படும் தினமன்று பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யும் முறை :**

நில அளவையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சை மற்றும் பெது நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகளின் மொத்த புள்ளிகளின் அடிப்படையில் முறையே ஆட்சேர்ப்பு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் எண்ணிக்கைக்கு சமமான எண்ணிக்கை நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகைமையானவர்கள் தெரிவு செய்யப்படுவர். தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக மட்டும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதோடு நேர்முகப் பரீட்சைக்குப் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

9. சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்கான அனைத்து தகைமைகளையும் பரீட்சை விண்ணப்பங்கள் பொறுப்பேற்கும் இறுதித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

10. **விண்ணப்பப்படிவமும் ஏனைய விபரங்களும் :**

(அ) I. இவ் அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி செ. மீ. 21 x 29 (A4) அளவிலான கடதாசியில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 04.0 வரையான தலைப்புகள் 01 ஆம் பக்கத்திலும், இலககம் 05-09 வரையான தலைப்புகள இரண்டாம் பக்கத்திலும், இலக்கம் 10-12 வரையான தலைப்புகள் 3 ஆம் பக்கத்திலும் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவத்தை தயாரித்தல் வேண்டும். பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை அதற்கு கீழே ஒட்டுதல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நில அளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் பதவி - திறந்த" எனக் குறிப்பிட்டு ............. ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் “நில அளவையாளர் நாயகம், பரீட்சை பிரிவு, நில அளவைத் திணைக்களம், த. பெ. இல. 506, கொழும்பு 05” எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (தனிப்பட்ட பெயர் அல்லது முகவரிக்கு எந்தவொரு கடிதமும் அனுப்பி வைத்தலாகாது.)

II. பூர்த்தி செய்யப்படாத, குறிப்பிட்ட தகைமைகள் இன்மை அல்லது தாமதமாக அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் எந்தவொரு அறிவித் தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

III. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பப்படிவம் குறித்து பொறுப்புக்கூறப்பட மாட்டாது.

IV. எந்தவொரு காரணத்தினாலும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது.

V. விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமை தொடர்பாக அறிவிக்கப்பட மாட்டாது.

(ஆ) விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பமானது அரசாங்கப் பாடசாலை அதிபர் அல்லது சாமாதான நீதவான் அல்லது சத்தியப் பிரமாண ஆணையாளர் ஒருவர் அல்லது சட்டத்தரணி அல்லது இராணுவப் படை, விமானப்படை அதிகாரமுள்ள அதிகாரி அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது 03/2016 ஆம் இலக்கங் கொண்ட அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின் படி தரங்களுக்கு அமைய சிரேட்ட மட்டத்தில் அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

11. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பின்வரும் ஆவணங் களை சமர்ப்பித்தல் வேண்டும்.

I. பிறப்புச் சான்றிதழ்;
II. கல்விச் சான்றிதழ்;
III. அண்மையில் பெற்றுக்ெகாள்ளப்பட்ட கிராம அலுவலர் சான்றிதழ் ;
IV. நடத்தைச் சான்றிதழ் - 2

*கவனிக்க வேண்டியது* :

கல்வி, தொழில் மற்றும் பிறப்புச் சான்றிதழ்களில் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

12. தற்போது அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்கள் விண்ணப்பங்களை தங்களது திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

13. பரீட்சை கட்டணம் ரூ. 800 ஆகும். எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்தில் அல்லது பிரதான அலுவலகத்தில் சிறாப்பர் பிரிவில் பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொண்ட பின்னர், விண்ணப்பப் படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் ஒட்டுதல் வேண்டும். காசுக் கட்டளை அல்லது காசோலை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சை நடைபெறும் தினம் குறித்து விண்ணப்பதாரிகளுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

14.0 **பரீட்சைக்கான நுழைவு :**

பரீட்சை அனுமதி பத்திரம் விநியோகிக்கப்பட்டவுடன் அது குறித்து இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் அறிவித்தல் வெளியிடப்படும். விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள அனை வருக்கும் விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப் பட்டுள்ள விலாசத்திற்கு பரீட்சை அனுமதிப் பத்திரம் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 3 அல்லது 4 நாட்களுக்குப் பின்னர் தமது பரீட்சை அனுமதி பத்திரம் கிடைக்கப் பெறாத விண்ணப்பதாரிகள் அது குறித்து இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தின் பரீட்சைப் பிரிவில் விசாரிக்க முடியும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி பரீட்சை நிலையத்தில் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரிக்கு தமது அனுமதிப் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். தமது பரீட்சை அனுமதி பத்திரத்தை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி பரீட்சைக்கு தோற்ற முடியாது. பரீட்சார்த்தி தமக்கான பரீட்சை மண்டபத்தில் மட்டுமே தோற்ற முடியும்.

**குறிப்பு** : பரீட்சார்த்தி ஒருவருக்க பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்புதலானது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ளார் என்பது ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

15. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தி அடையு மாறு விண்ணப்பதாரி தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத் தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டை;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

16. **போலியான தகவலை வழங்கியமைக்கான தண்டனை:**

விண்ணப்பதாரிக்கு குறித்த தகைமைகள் இல்லை என்பது அறியப்படுமிடத்து, பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடாத்தப்படும் காலத்தில் அல்லது பரீட்சையின் பின்னர் அல்லது ஏதேனு மொரு சந்தர்ப்பத்தில் அவரின் விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படும். சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்த பின்னர் விண்ணப்பதாரி சமர்ப்பித்த ஏதேனும் தகவல் போலியானது எனவும் அல்லது ஏதேனும் விடயம் மறைக்கப்பட்டிருப்பது அறியப்படுமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

17. **மொழிமூலம் :**

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூலங்களில் நடாத்தப்படும். அத்தோடு விண்ணப்பதாரிகள் விரும்பிய மொழிமூலத்தில் தோற்ற முடியும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலமானது பின்னர் மாற்றப்படமாட்டாது.

18. **பரீட்சை பெறுபேறு :**

விண்ணப்பதாரிகளின் பரீட்சை பெறுபேறு அறிவித் தலானது நிலஅளவையாளர் நாயகத்தினால் தபால் மூலம் அல்லது www.survey.gov.lk இணையத் தளம் ஊடாக அறிவிக்கப்படும்.

19. இந் நிபந்தனைகளில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பாக நிலஅளவையாளர் நாயகத்தினால் தீர்மானம் எடுக்கப்படும்.

என்.கே.யு.ரோஹண,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 05,
2025, திசெம்பர் 05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கமத்தொழில், கால்நடை, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு**

**நிலஅளவைத் திணைக்களத்தின் நிலஅளவை உபகரண தொழில்நுட்ப வல்லுநர் தரம் III பதவிக்கான வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை – 2025**

Specimen Application Form for the Open Competitive Examination for Recruitment to the Post of Survey Instrument Technician Grade III – 2025 in the Department fo Survey

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயரானது சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம்

சிங்களம் - 1
தமிழ் - 2 ☐
ஆங்கிலம் -3
(குறித்த இலக்கத்தைப் பெட்டியினுள் எழுதுக.)

01. 01.1 முதலெழுத்துக்களுடன் பெயர் :

……………………………………………………………………………………

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம் : PERERA A.B.C

சிங்களத்தில் : ……………………………………………………………………………

01.2 முழுப் பெயர் :

……………………………………………………………………………..

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

01.3 முழுப் பெயர் :

……………………………………………………………………………..

(சிங்களத்தில் / தமிழில் )

01.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

01.5 பால் : (பெண்/ ஆண்) : (பெண் - 1, ஆண் - 2) ☐
(குறித்த இலக்கத்தை பெட்டியினுள் எழுதுக.)

2.0 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : …………………………

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்) : …………………………

2.3 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய விலாசம் : …………………………
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்)

2.4 தொலைபேசி இலக்கம் : …………………………

3.0 3.1 விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் : …………………………

3.2 பிரதேச செயலாளர் பிரிவு : …………………………

3.3 வசிக்கும் காலம் : …………………………

3.4 கிராம அலுவலர் பிரிவு : …………………………

4.0 பிறந்த திகதி :

ஆண்டு : …………… மாதம் : ………….. திகதி : ………………..

2025 . ………… ஆம் திகதிக்கு வயது :

வருடங்கள் : …………… மாதங்கள் : ………….. நாட்கள் : ………………..

5.0 கல்வித் தகைமைகள் : (குறித்த சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

க.பொ.த (சா./த.) பரீட்சை தொடர்பான விபரம் :

i. பரீட்சை நடைபெற்ற ஆண்டு மற்றும் மாதம் : …………………………..
ii. பரீட்சை இலக்கம் : ………………………………..
iii. பெறுபேறுகள் :

| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

6.0 தொழிற் தகைமைகள் : (குறித்த சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் )

6.1 பயின்றுள்ள பாடநெறி : ……………………………………………..
6.2 பாடநெறியை நடாத்திய நிறுவனம் : ……………………………………………………………………
6.3 பாடநெறியின் காலம் : ………………………………………

7.0 வேறு தகைமைகள் :

……………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………

8.0 நீங்கள் எப்போதாவது ஏதேனும் ஒரு குற்றச்சாட்டிற்காக நீதிமன்றம் ஒன்றில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? (குறித்த பெட்டியினுள் ✓அடையாளம் இடுக)

ஆம் : ☐ இல்லை : ☐

8.1 “ஆம்” எனின், அது குறித்த விபரங்களை குறிப்பிடுக. :
…………………………………………………………………………

9.0 பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டு குறித்த விபரம் :
9.1 பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் : ………………….
9.2 பற்றுச் சீட்டின் இலக்கம் மற்றும் திகதி : …………………………
9.2 செலுத்தப்பட்டத் தொகை : ரூ. ………………………

பரீட்சைக் கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டினை கழறாதவாறு இங்கு ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி ஒன்றை தம்வசம் வைத்துக்கொள்ளவும்.)

10.0 விண்ணப்பதாரியின் சான்றுபடுத்தல் :

(அ) இவ் விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மையானவையும் சரியானவையும் என சான்றுரை அளிக்கின்றேன். இங்கு ஏதேனும் ஒரு பகுதி பூர்த்தி செய்யப்படாது அல்லது தவறாக பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் அது குறித்த நட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும், இங்கு சகல பகுதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதை வெளிப்படுத்துகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள இக் கூற்றுகள் போலியானவை என நிரூபிக்கப்பட்டால், நியமிக்கப்படுவதற்கு முன்னர் நான் பொருத்தமற்றவர் எனவும், நியமனம் பெற்றதன் பின்னர் நிரூபிக்கப்பட்டால் சேவையில் இருந்து நீக்கப்படவும் கட்டுப்பட்டு உள்ளதனை நான் அறிவேன்.

(இ) மேலும், பரீட்சை நடாத்துதல் தொடர்பாக நிலஅளவையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பிலும் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு நான் கட்டுப்படுகிறேன் என்பதை வெளிப்படுத்துகிறேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலும் பின்னர் மாற்றப்படமாட்டாது.

திகதி:……………………..  …………………..

விண்ணப்பதாரியின் கையொப்பம்

11.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்தல் :

இவ் விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்கும் ……………………………………. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் …………………….. ஆம் திகதி என் முன்னிலையில் மேற்குறித்த கையொப்பத்தை இட்டார் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

………………………………

சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்

திகதி : ……………………
சான்றுப்படுத்துபவரின் பெயர் : ……………………………..
பதவி : …………………………
விலாசம் : ………………………
(உத்தியோகபூர்வ முத்திரை)

12.0 தற்போது அரசாங்க அல்லது பகுதியளவிலான அரசாங்க நிறுவனத்தில் சேவையாற்றும் அலுவலர்களுக்கு மட்டும் உரித்தானது.

திணைக்கள / நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தல் :

இவ் விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ……………………………………. என்பவர் …………………………… திணைக்களத்தில் /நிறுவனத்தில் ……………………… ஆந் திகதியிலிருந்து ……………… ஆந் திகதி வரை ………………………….. என்ற பதவியில் சேவையாற்றுகிறார். அத்தோடு, அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது/ எடுக்கப்படவில்லை. அவரின் சேவை நடத்தை மற்றும் வரவு திருப்திகரமானது/ திருப்தியற்றது. குறித்த பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி உள்ளார் எனவும், அப்பற்றுச்சீட்டானது ஒட்டப்பட்டுள்ளது எனவும், அவர் …………………… பதவிக்கு தெரிவு செய்யப்படுவாராயின் இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் இருந்து அவரை விடுவிக்க முடியும்/ முடியாது என்பதை அறியத்தருகிறேன்.

…………………………………

திணைக்களத் / நிறுவனத் தலைவரின் கையொப்பம்

## தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

## 2025.10.31 ஆம் திகதிய வர்த்தமான அறிவித்தலை திருத்தம் செய்தல்

2025.10.31 ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி இலக்கம் 2461 ஐக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் வருகின்ற தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2026 ஆம் ஆண்டில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

டி. பாபு
பணிப்பாளர் நாயகம்.

| *தொடர் இல.* | *பாடநெறிக் குறியீட்டு இல.* | *பாடநெறியின் பெயர்* | *திருத்தம் செய்யப்பட வேண்டிய முறை* |
|---|---|---|---|
| 13. | G50S003F4.3 | மோட்டார் வாகன தொழில்நுட்ப வல்லுநர் Automobile Mechanic<br>முழு நேரம் -<br>1 ½ வருடங்கள் | ஹோமாகம தொழில்நுட்ப கல்லூரி தற்போது NVQ மட்டம் 4கு நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது. |
| 22. | G50S001F4.2 | மோட்டார் வாகன வளி சீராக்கி தொழில்நுட்பவியலாளர்<br>AUTOMOBILE AIR CONDITIONING TECHNICIAN<br>முழு நேரம் -<br>ஒரு வருடம் | ஹோமாகம தொழில்நுட்ப கல்லூரி தற்போது NVQ மட்டம் 4 நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது. |
| 32. | ETC 24 | பொறியியல் படவரைதலுக்கான தேசிய சான்றிதழ்<br>National Certificate in Engineering Draughtsman ship<br>(F45S009)<br>முழு நேரம் -<br>ஒரு வருடம் | ஹோமாகம தொழில்நுட்ப கல்லூரி தற்போது NVQ மட்டம் 4 நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது. |
| 175A. | A01T003F6.1 | விவசாய உற்பத்தித் தொழில்நுட்பவியலில் உயர் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா<br>Higher National Diploma in Agricultural Production Technology<br>முழு நேரம் -<br>ஒரு வருடம் | உள் நுளைவதற்கான தகுதிகள்<br>1. சம்பந்தப்பட்ட துறையில் NVQ மட்டம் 5 சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br><br>நடைபெறவுள்ள கல்லூரிகள் : - அம்பாறை, தம்புள்ளை, ஹசலக்க, குளியாப்பிட்டிய, வரகாபொல, சம்மாந்துறை, எம்பிலிப்பிட்டிய. |
| 176. | A01T003P6.1 | விவசாய உற்பத்தித் தொழில்நுட்பவியலில் உயர் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா<br>Higher National Diploma in Agricultural Production Technology | பாடநெறி இன் காலம் 01 ½ ஆண்டுகள் பகுதி நேரமாக திருத்தப்படும். |
| 177. | A01T003P5.1 | விவசாய உற்பத்தித் தொழில்நுட்பவியலில் உயர் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா<br>National Diploma in Agricultural Production Technology | பாடநெறி இன் காலம் 01 ½ ஆண்டுகள் பகுதி நேரமாக திருத்தப்படும். |

12-435